இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 14-09-2025

# மிரட்டுகிறதா தேர்தல் ஆணையம்?

**தேர்தலை நியாயமாக நடத்திக் காட்ட வேண்டிய தேர்தல் ஆணையம், மிரட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறது. “தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியலில் தீவிர திருத்தம்” என்று சொல்லி மிரட்டத் தொடங்கி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் தமிழ்நாடு பயப்படாது.**

தேர்தல் ஆணையம், அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். ஆனால் அதனை பா.ஜ.க. தனது கிளை அமைப்பாக மாற்றி விட்டது. தேர்தல் ஆணையர் தேர்வில் இருந்து உச்சநீதிமன்ற நீதிபதியை எப்போது நீக்கினார்களோ அப்போதே தேர்தல் ஆணையம் தனது சுதந்திர எண்ணத்தை இழந்துவிட்டது. பா.ஜ.க.வால் நினைக்கப்படுகிறவர் தேர்தல் ஆணையராக ஆக முடியும் என்ற சூழ்நிலையானது, தேர்தல் ஆணையத்தை பா.ஜ.க.வின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டது. அதிலும் குறிப்பாக தேர்தல் ஆணையர்களாக வருகிறவர்கள், ஆளும் பா.ஜ.க. அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள். இவர்கள் ‘முன்பு நடந்து கொண்டதைப் போலவே’ இப்போதும் நடந்து காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்போது தலைமை தேர்தல் ஆணையராக இருக்கும் ஞானேஷ்குமார், ஒன்றிய உள்துறை அமைச்சகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றியவர். உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு நெருக்கமானவர். அதனால்தான் தேர்தல் ஆணையர் ஆனார். பின்னர் தலைமை தேர்தல் ஆணையராகவே கடந்த பிப்ரவரி மாதம் ஆக்கப்பட்டார். இவர், அமித்ஷா கட்டுப்பாட்டில்தான் தேர்தல் ஆணையம் இயங்க வேண்டும் என்ற நினைப்பிலேயே செயல்பட்டு வருகிறார்.

பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் எடுத்து வைத்து அங்கு வாக்குத் திருட்டு எப்படி நடந்துள்ளது என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். இவை இரண்டுக்கும் இதுவரை தலைமை தேர்தல் ஆணையர் பொறுப்பான பதிலை இன்னமும் அளிக்கவில்லை.

“வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் தனது கையெழுத்துடன் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று உறுதி செய்யப்படும். அதற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்” இது தான் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அளிக்கும் பதில்.

ராகுல் காந்தி எந்தத் தொகுதியைச் சொல்கிறாரோ, அதில் முறைகேடு நடக்கவில்லை என்றால் ராகுலைப் போலவே செய்தியாளர் கூட்டம் நடத்தி, அவர் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் செய்து காட்டியதைப் போல தலைமைத் தேர்தல் ஆணையரும் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் நடத்தி இருக்க வேண்டாமா? அப்படி நடத்தி இருந்தால் ஞானேஷ்குமாரை நியாயவான் எனப் பாராட்டலாம். அதைச் செய்யாமல் மிரட்டினால்...? இவர் என்ன அமித்ஷாவா?

**ஞானேஷ்குமார் நியமனத்தை ‘பண்பற்ற நியமனம்’ என்று அப்போதே கண்டித்தார் ராகுல் காந்தி. “புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் நியமன நடைமுறை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் 48 மணி நேரத்துக்குள் விசாரணைக்கு வர உள்ள நிலையில், அந்தப் பதவிக்குப் புதியவரைத் தேர்ந்தெடுத்து பிரதமர் மோடியும், அமைச்சர் அமித்ஷாவும் மேற்கொண்ட முடிவு பண்பற்ற நடவடிக்கை” என்று குற்றம் சாட்டி இருந்தார் ராகுல் காந்தி. ‘பண்பற்ற நியமனத்தால்’ வந்தவர் நெறியற்ற பேச்சைத் தானே பேசுவார்?**

அத்தகைய ஞானேஷ்குமார் தலைமையில் டெல்லியில் நேற்றைய தினம் தேர்தல் ஆணையர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது. பீகார் மாநிலத்தில் நடந்ததைப் போல மற்ற மாநிலங்களிலும் சிறப்பு தீவிர திருத்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் சொல்லி இருக்கிறார்.

சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் இப்பணிகளைத் தீவிரப்படுத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்தச் செயல்பாடுகள் குறித்து உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு விசாரணை நடைபெற்று வரும் போது, அதைப் பற்றிக் கவலைப்படாமல் தேர்தல் ஆணையம் செயல்படுவது சரியல்ல.

ஆதார் அட்டையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொன்னபிறகும், அதனை ஏற்காமல் தேர்தல் ஆணையம் அடம்பிடிக்கிறது. ஆதார் அட்டையை குடிமைக்கான சான்றாக ஏற்க முடியாது என்று உச்சநீதிமன்றம் சொல்வதும் ஏன் என்று தெரியவில்லை. அப்படியானால் ஆதார் அட்டையின் பயன் என்ன? மரியாதை என்ன? அந்த அட்டைக்கு மதிப்பு இருக்கிறதா இல்லையா?

பீகாரில் நீக்கப்பட்டவர்களுக்கான காரணத்தை உச்சநீதிமன்றத்தில் சொல்வதற்கு தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது. உச்சநீதிமன்றம் சொன்ன பிறகுதான் நீக்கப்பட்டவர்கள் பட்டியலையே தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

**உண்மையான, நேர்மையான தேர்தலை நடத்தினால் அதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவது இல்லை. ஆனால் தேர்தல் ஆணையமானது தனது நடவடிக்கைகளை குடியுரிமைச் சட்ட இயக்ககம் போல மாற்றிக் கொண்டே போவது கடும் கண்டனத்துக்குரியது. தேர்தல் ஆணையத்தால் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை, ஒன்றிய அரசால் தரப்பட்ட ஆதார் அட்டை ஆகியவற்றைக் கூட தேர்தல் ஆணையம் மதிக்காமல் இருப்பதுதான் பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.**

தகுதியான அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்கும் உரிமை கிடைக்க வேண்டும். அதனை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இதைத் தவிர அவர்களுக்கு வேறு என்ன வேலை?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.9.2025) சென்னை, பெசன்ட் நகர் மின் மயானத்தில், உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய தனது சம்பந்தியும், சபரீசன் அவர்களின் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு, கமல்ஹாசன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்து குழும இயக்குநர் என்.ராம் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

# தி.மு.க. தொழிலாளர் அணியினர் திரளாகப் பங்கேற்போம்!

## கழக தொழிலாளர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப்.14–

தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம், நேற்று முன்தினம் (12.09.2025) காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், தொழிலாளர் அணி பொறுப்பாளர் ஆ.இராசா, எம்.பி., தொழிலாளர் அணி வளர்ச்சி குறித்து சிறப்புரை ஆற்றிட, தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் தலைமையில் தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், முனைவர் ஆர்.வரதன், கோவை நா.தமிழ்செல்வன், சேலம் காசி, கரூர் விஜயகுமார், இராமேஸ்வரம் அ.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் – பி.டி.சி. வெ.பாலு நன்றியுரையும் வரவேற்புரை மு.இராஜகாந்தம் ஆற்றிட நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:–

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் கடந்த நான்கரையாண்டுகாலத்தில் 10,80,000 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, அதன் மூலம் நேரடியாக 14 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி, அதன்மூலம் 14 இலட்சம் தொழிலாளர்கள் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, இந்திய ஒன்றியத்தில், நெ.1 பொருளாதார தலைநகராக மாற்றி சாதனை படைத்துள்ள ஒப்பாரும் மிக்காருமில்லா முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு கழக தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் – வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த மாதம் இறுதி வாரத்தில் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதலமைச்சர் கழகத் தலைவர் எட்டு நாள் பயணமாக, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று, 15,516 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து, அதன் மூலம் 17,613 வேலைவாய்ப்புகளை உருவாக்கிட ஒப்பந்தங்களை உருவாக்கி தமிழ்நாடு திரும்பிய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு கழக தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் – வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த செப்டம்பர்4 அன்று சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டையொட்டி, இலங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டனில் உலகப்புகழ் வாய்ந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருப் படத்தை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து கொள்கை முழக்கமிட்டு நாடு திரும்பிய “தந்தை பெரியாரின் கொள்கை வாரிசு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு கழக தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் – வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

“மாநில சுயாட்சிக்காக ஒன்றிய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக போராடிவரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்!” என்று உறுதிமொழி எடுத்து எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரப் பயணத்தை காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணாவின் இல்லத்தில், அவரை வணங்கி துவக்கியுள்ள துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கழக தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் – வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் பின்னால், அவரது அணிவகுப்பில் சிப்பாய்களாக தி.மு.க. தொழிலாளர் அணி என்றும் நிற்கும் என்று உறுதி அளிக்கிறது.

### ஓரணியில் – தமிழ்நாடு!

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும்; ஒன்றிய அரசால் நடத்தபடுகின்ற கூட்டாட்சி தத்துவத்தின் படுகொலைக்கு எதிரான எதிராகவும்; நீட் தேர்வானாலும், தமிழர்களுடைய பண்பாடு பிரச்சனைகளை சிதைக்கின்ற கீழடி பிரச்சனையாக இருந்தாலும், மாநிலத்திற்கு வரவேண்டிய நிதிபங்கீடாக இருந்தாலும், புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் எல்லா தளங்களிலும் தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கின்ற, காலச்சாரத்தை பறிக்கின்ற, மான உணர்வுகளை சிதைக்கின்ற ஒன்றிய அரசுக்கு எதிராகவும் இதுவரை இந்தியாவில் எந்த அரசியல் கட்சி தலைவரும் எடுக்காத ஒரு முயற்சியை முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் “ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில், தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று மண், மொழி, மானம் காப்பதற்காக ஓரணியில் வரவேண்டும் என முயற்சியை எடுத்தார்கள்.

அது ஜூலை 1 ஆம் தேதி தொடங்கியது, திமுகவின் 7 லட்சம் தொண்டர்கள் அந்த பணியில் ஈடுபட்டனர்; இந்த 70 நாட்களில் தமிழ்நாட்டில் இருக்கின்ற 68,000 வாக்குச்சாவடிகளிலும் சென்று ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தோடு இந்த முன்னெடுப்பின் முதற்கட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதும் – இதனால், தமிழ்நாடு முழுக்கவும் ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்கள் இணைந்துள்ளன. இத்தகு சாதனை புரிந்திட்ட ”சாதனை நாயகன் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த பாராட்டுகளையும் – வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

### அமெரிக்கா விதித்துள்ள 50 சதவிகித வரி!

இந்திய பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள 50% வரி விதிப்பால் கடும் நெருக்கடியையும், பெரும் பாதிப்பினையும் சந்தித்துள்ளதால், பின்னலாடை தொழிலின் மையமான திருப்பூர். கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதோடு இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதை அறிந்த முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், பாதிப்புக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டுமென இந்திய பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், இலண்டனில் இருந்து கொண்டே அகில இந்தியாவையே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு திருப்பூரில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களையும் திரட்டி, மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றிய ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி, திருப்பூர் பின்னலாடைத் தொழிலாளர்கள் இலட்சக்கணக்கானவர்களுக்காக குரல் கொடுத்த ”தொழிலாளர்களின் தோழன் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு, தி.மு.க. தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

வருகிற 17.9.2025 அன்று கரூர் பைபாஸ் சாலை, கோடங்கிப்பட்டியில் நடைபெற உள்ள கழகத்தின் பெரு விழாவான பெரியார் – அண்ணா – கழகம் பிறந்த நாளான ”தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க. தொழிலாளர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் அணி நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர் அணித் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

புதியதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் தொழிலாளர் அணி நிர்வாகிகள், தத்தமது மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளரின் ஆலோசனைகளையும் – வழிகாட்டுதல் களையும் பெற்று 2026ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தற்போதிலிருந்தே தங்களது மாவட்டத்தில் அடங்கியுள்ள மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் பகுதிகளில் கழக அரசின் சாதனைகளையும் – முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பார் போற்றும் மக்கள் நலத் திட்டங்களையும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, மீண்டும் 2026ல் கழக ஆட்சி மலர்ந்திடவும் – கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கும் பாடுபட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

